# நிலைமாறுகால நீதி:

## முன்னோக்கி பயணிப்பதற்கு கடந்த காலத்தை மீட்டிப்பார்த்தல்

மூலம்: இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும் லண்டன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச அரசியலில் PhD பட்டப்படிப்பினை தொடர்பவருமான நடாசா பலன்சூரிய

SRI LANKA BAROMETER

OUR VOICES . OUR CHOICES

අපේ හඬ . අපේ තීරණ

எங்கள் குரல்கள் . எங்கள் தேர்வுகள்

THINK PIECES SERIES: 3 – 2021

**Transitional Justice**
*Looking Back to Move Forward*
Natasha Palansuriya

First Published in November 2021

This article was originally written in English and translated into Sinhala and Tamil.

This publication may be reproduced by an organisation/individual for use in educational activities, provided the source is acknowledged including the link to the Sri Lanka Barometer website and the Sri Lanka Barometer is notified . No part of this publication may be adapted, distributed in any form or by any means, or stored in a database or retrieval system without the authorisation of the Sri Lanka Barometer. Commercial use is prohibited.

# உள்ளடக்கங்கள்


நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரண்டும் ஒன்றா? 06

இது நமது ஆயுதப் படைகளுக்கு எதிரான ஒரு தாக்குதல் 07

இது இலங்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் மேற்குலக நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது 08

இது எமது நாட்டின் இறையாண்மையை அச்சுறுத்துகிறது 10

எமக்கு நிலைமாறுகால நீதி அவசியமில்லை – யுத்தம் நிறைவடைந்து விட்டதால் முன்னோக்கிச் செல்லலாம் 12

முன்னோக்கி செல்ல வழியின்றி சேற்றில் சிக்கியுள்ளது போன்ற நிலை 15

# அறிமுகம்

நிலைமாறு கால நீதி – என்ற பதம்› அதன் யெல்முறை› கருத்து போன்றன யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய விடயமாக பேசப்பட்டு வருகிறது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களாலும் அரசியல்வாதிகளாலும் தமது சொந்த நிகழ்ச்சி நிரல்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டன மற்றும் ஊடகங்கள் இவ்விடயத்தினை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளன போன்றன இதற்கான அடிப்படை காரணங்களாக அமைவதோடு இது பொதுமக்கள் மத்தியில் நிலைமாறுகால நீதி தொடர்பான தவறான கருத்துகளையும் உருவாக்கியுள்ளது. அதாவது (1) இது நமது ஆயுதப் படைகளுக்கு எதிரான தாக்குதல் (2) இலங்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் மேற்குலக நாடுகளால் இது உருவாக்கப்பட்டுள்ளது (3) இது நமது நாட்டின் இறையாண்மையை அச்சுறுத்துகிறது (4) எமக்கு நிலைமாறு கால நீதி தேவையில்லை - யுத்தம் நிறைவடைந்து விட்டதால், எம்மால் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல முடியும் போன்றன மக்கள் மத்தியில் நிலவும் சில தவறான கருத்துகளாகும்.

இலங்கையில் நிலவும் யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் நீதியின் தேவை இன்றியமையாதது எனினும்› இது குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களிடம் இருந்து எப்போதும் ஒரே மாதிரியான அவசர மற்றும்/அல்லது சாதகமான பதில் கிடைப்பதில்லை. குறிப்பாக› நிலைமாறு கால நீதி மற்றும் அதனோடு இணைந்த ‘சர்வதேச தலையீடு’ போன்ற யோசனையை எதிர்க்கின்ற அரச மற்றும் தீவிர தேசியவாத குழுக்கள் மத்தியில் இந்நிலை அவதானிக்க முடியும். அதேபோல› இது இலங்கைக்கு சொந்தமான செயன்முறையல்ல எனவும் இலங்கையின் மீது ‘கட்டாயப்படுத்தி’ திணிக்கப்பட்டதாகவும் இதனால் தேசத்தின் இறையாண்மை பாதிக்கப்படுவதாகவும் கருதப்படுகிறது. பழைய காயங்களை தோண்டி எடுக்க உதவாமல்› கடந்த காலத்தை மறந்து நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதும் நிலைமாறு கால நீதிக்கு எதரான மற்றொரு வாதமாகும். இந்த கட்டுரை இத்தகைய வாதங்களை கட்டவிழ்த்து› “நிலைமாறு கால நீதியுடன்” ஒட்டிக்கொண்டிருக்கும்  அரசியலைப் பிரித்து› ஆயுத மோதலுக்குப் பிறகு நமக்கு ஏன் ஒரு நீதி செயல்முறை அவசியம் என்பது பற்றி விவாதிக்கிறது.

# நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரண்டும் ஒன்றா?

நிலைமாறு கால நீதி என்ற பதத்தை அரசியல் விவாதங்களின் போது நாங்கள் கேட்கிறோம் சில நேரங்களில்› நிலைமாறு கால நீதி மற்றும் 'நல்லிணக்கம்'என்ற பதங்கள் ஒன்றுக்கொன்று மாற்றாகவும் பயன்படுத்தப்படுகின்றன. உண்மையில் இதற்கு என்ன அர்த்தம்› இவ்விரண்டு பதங்களும் ஒன்றா? எளிமையான விளக்கத்தில் கூறுவதாயின்› நிலைமாறுகால நீதி என்பது ஒரு உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்ததற்கு பிறகு எஞ்சியிருக்கும்  வன்முறை மற்றும் வலிமிகுந்த மரபினை ஒரு சமூகம் புரிந்து கொள்ள உதவும் செயல்முறைகளினதும் வழிமுறைகளினதும் வரம்பாகும். குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படும் போதும்› நீதி வழங்கப்படும் போதும் ஒரு சமூகம் இதனை ஏற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மட்டுமே நல்லிணக்கத்தை அடைந்து கொள்ள முடியும். இது நிலைமாறு கால நீதியும் நல்லிணக்கமும் ஒன்றா என்ற கேள்விக்கு நிச்சயமாக இல்லை என்ற பதிலை ஓரளவு எமக்கு வழங்குகிறது. நிலைமாறுகால நீதியின் ஒரு முக்கிய அம்சமாக நல்லிணக்கம் இருப்பதால் மோதலில் இருந்து வெளிவரும் பெரும்பாலான நாடுகள் இதனை அடைந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஒருவருக்கொருவர் மோதலில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் பரஸ்பர மரியாதையுடன் ஒன்றிணைகின்ற போது› அனைத்து தரப்பினர்களும் யுத்தத்தின் போது ஏற்பட்ட அநீதிகள் குறித்த பொதுவான புரிதலினை ஏற்றுக்கொள்கின்ற போது, மோதலால் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்குமிடையில் அமைதியான மற்றும் இணக்கமான உறவுகளை மீட்டெடுக்கின்ற போது நல்லிணக்கம் தோற்றம் பெறுகின்றது. எனவே› நிலைமாறு கால நீதி என்பது 'நல்லிணக்கம்' எனும் இலக்கினை அடைந்துகொள்ள உதவுகின்ற வாகனமாக அமைகின்றது. இக்கட்டுரை வாகனமாக செயற்படுகின்ற நிலைமாறு கால நீதி குறித்து மட்டுமே கவனம் செலுத்தும் என்பதோடு பொதுவான மற்றும் அடுத்தடுத்த அரசியல் சக்திகளாலும் ஊடகங்களாலும் வலுப்படுத்தப்பட்ட தவறான கருத்துக்களை திருத்தியமைக்க முயற்சிக்கும்.

# இது நமது ஆயுதப் படைகளுக்கு எதிரான ஒரு தாக்குதல்

நிலைமாறு கால நீதியின் நோக்கம் ஒரு மோதலின் போது நிகழ்ந்த கடுமையான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதாகும். பாகுபாடு, வெறுப்பினால் தூண்டப்பட்ட குற்றம், திட்டமிட்ட பாலியல் வன்புணர்வு, இன அழிப்பு, விருப்பமில்லாத இடப்பெயர்வு, கட்டாயப்படுத்தி சேர்க்கப்படும் ஆளணி, பசி மற்றும் நோய், வீடு மற்றும் வாழ்வாதார இழப்பு, பொருளாதார வாய்ப்பு கிடைக்காமை மற்றும் சட்டரீதியான தீர்வு போன்றன மோதலின் போது ஏற்படுகின்ற சில அநீதிகளாகும். இது போன்ற குற்றங்கள் நிகழுகின்ற போது நீதியானது பின்பற்றப்பட வேண்டும் ஏனெனில், நாங்கள் சட்டத்தை மதிப்பதோடு நீதி, சட்டத்தின் ஆட்சி, மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை அங்கீகரிக்கும் அரசியலமைப்பிற்கு கட்டுப்பட்டுள்ள ஒரு நாடாகும். நாட்டின் ஆயுதப் படைகளும் இதே விதிகளைக் கொண்டே நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், இத்தகைய மீறல்கள் ஆயுதப் படைகளால் மட்டுமன்றி கிளர்ச்சி குழுக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இதன் மூலம் தெளிவாக புரிந்துகொள்ள முடிகின்றது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூட

> *“தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் உட்பட இலங்கையின் அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்கும் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களுக்குமான விரிவான பொறுப்புக்கூறல் செயன்முறை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்”.*

நிலைமாறு கால நீதி என்பது ஆயுதப் படைக்கு எதிரான தாக்குதல் அல்ல மாறாக, யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கு காரணமான அனைத்து குற்றவாளிகளையும் கருத்தில் கொள்ளும் ஒரு பொறிமுறையாகும் என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதேபோல, ஆயுதப்படைகளில் சிலர் இந்தக் குற்றங்களைச் செய்திருந்தாலும், அது ஆயுதப்படையின் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே எல்லோரையும் குற்றவாளிகளாக கருதவேண்டும் என்பது அர்த்தமல்ல. யுத்தத்தை

முடிவிற்கு கொண்டுவர உதவிய ஆயுதப்படைகளின் சேவையை இதனால் எந்த வகையிலும் நிராகரிக்க முடியாது. அப்பாவி பொதுமக்களைப் பாதுகாக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தவும் உதவிய ஆயுதப்படைகளின் முயற்சிகளை இது ஒரு போதும் குறைத்து மதிப்பிடாது. உண்மையில், அப்பாவி மக்களைக் காப்பாற்ற ஆயுதப்படைகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்ததை இது அங்கீகரிக்கின்றது என்பதோடு அவர்களின் முயற்சியை ஒரு போதும் மறக்க முடியாது.

இருப்பினும், மீறல்கள் அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மறுக்க முடியாது, அவை சரிசெய்யப்பட வேண்டும். இது கடந்த காலத்தை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு பகுதியாக அமையும். இந்த மீறல் மீண்டும் நடக்காது என்பதை உறுதி செய்வதே கடந்த காலத்தை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவம் ஆகும். மேலும், குற்றவாளிகளை பொறுப்பேற்க செய்வதன் மூலம் யுத்த மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது நீதியைப் பெற்று தருவதோடு ஆயுதப்படைகள் மற்றும் நாட்டின் பெருமையையும் கண்ணியத்தையும் பாதுகாக்கும். அரசாங்கம் சட்டவாட்சியை நிலைநாட்டும் ஒன்றாக மதிக்கப்பட வேண்டுமாயின், முன்னுரிமை விடயங்கள் உருவாக்கப்பட வேண்டும். தண்டனை முறை பின்பற்றப்படாத ஒரு நாட்டில், முழுமையான, நியாயமான நீதி மட்டுமே மீள் நிகழாமையை உறுதி செய்வதற்கான ஒரே வழியாகும்.

## இது இலங்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் மேற்குலக நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது

இலங்கையில் நிலைமாறுகால நீதி, ஐக்கிய நாடுகளின் 30/1 எனும் தீர்மானத்தினூடாக வழி நடத்தப்படுவதுடன் அரசாங்கமும் இத்தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் சபை உறுப்பினர்களும் இணை ஆதரவாளர்களாக செயற்படுகின்றனர். ஐ.நாவின் உதவியுடன் இலங்கை அரசாங்கமும் சிவில் சமூகமும் கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்களின் மரபினை அடையாளங்காண ஒரு முழுமையான நிலைமாறுகால நீதி மூலோபாயத்தினை திட்டமிட்டது. இந்த நோக்கத்திற்காக, நல்லிணக்கம், சிறந்த நிர்வாகம், மீள்குடியேற்றம் மற்றும்

நீடித்த தீர்,வுகள் போன்ற நிலைமாறு கால நீதியின் நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டு சமாதான கட்டமைப்பு முன்னுரிமை திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்வைத்து, இலங்கை இந்த தீர்மானத்தை உருவாக்கியுள்ளது என்பதே ‘இணை ஆதரவு’ என்பதன் மூலம் கருதப்படுகின்றது. எனவே, மேற்குலக நாடுகளால் இது எந்த வகையிலும் உருவாக்கப்படவில்லை மாறாக அமெரிக்கா, இங்கிலாந்து, மொன்டினீக்ரோ, மாசிடோனியா போன்ற நாடுகளுடன் இணைந்து குறிப்பிட்ட தீர்மானத்தை உருவாக்குவதில் இலங்கை முக்கிய பங்கினை வகித்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும், ஏனெனில் இலங்கை இந்த செயன்முறையை கட்டுப்படுத்துவதோடு நாட்டிற்கு பொருத்தமான நிபந்தனைகளையும் வகுக்க முடிந்தது. இலங்கை நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் தீவிரமாக உள்ளது என்பதை இது சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டியது, அதுமட்டுமல்லாது மிக முக்கியமாக அரசாங்கம் தமிழ் சமூகத்தின் குறைகளை பரிசீலிப்பதாக அறிவிக்கும் சமிக்ஞையாகவும் இது அமைந்ததோடு இறுதியில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் யுத்தத்தின் போது இழந்த சில கண்ணியமான விடயங்களை திருப்பப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வலுவான நடவடிக்கையாக இருந்தாலும், முன்னேற்றம் சிறியளவிலேயே இருந்ததோடு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதிலும் மெதுவான முன்னேற்றமே இருந்தது இருப்பினும், காணிகளை விடுவித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சில அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை, காணாமல் போனோர் அலுவலகத்தை (OMP) செயற்படுத்துதல் மற்றும் இழப்பீட்டு அலுவலகத்திற்கான சட்டத்தை நிறைவேற்றுதல் போன்ற சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பு நாடான இலங்கை இவ்வாறு முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த கடமைப்பட்டுள்ளது. இதனை ஒரளவு மட்டுமே செயற்படுத்தியிருந்தாலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தால் முன்வைக்கப்பட்ட மேலும் இரு தீர்மானங்களை ஏற்றுக்கொண்டதால் இலங்கைக்கு அதனை செயற்படுத்துவதற்கான மேலதிக காலத்தை மனித உரிமைகள்

ஆணையகம் வழங்கியது. 2017 இல் முன்வைக்கப்பட்ட 34/1 எனும் தீர்மானம் மற்றும் 2019 இல், முன்வைக்கப்பட்ட 40/1 எனும் தீர்மானம் போன்றன மேற்குலக நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் அளித்த ஆதரவினை எடுத்துக் காட்டுகின்றது. மேலும், இலங்கையில் நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்காக ஐ.நா வழங்கிய தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதியுதவி போன்றன ஐக்கிய நாடுகளால் வழங்கப்பட்ட மேலதிக ஆதரவு தொடர்பாக எடுத்துக் கூறுவதால், நிலைமாறுகால நீதி இலங்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு வழி என்ற கருத்து இதன் மூலம் மறுக்கப்படுகிறது.

## இது எமது நாட்டின் இறையாண்மையை அச்சுறுத்துகிறது

இறையாண்மை என்பது ஒரு அரசிற்கு தன்னை ஆளுவதற்கு உள்ள அதிகாரமாகும். இறையாண்மையை கொண்ட அரசாக இருப்பதன் அர்த்தம் என்னவெனில், அரசுகள் அதற்கான சொந்த சட்டங்களை உருவாக்கி அதனை அமுல்படுத்தக் கூடியதாகவும் பிராந்திய எல்லைகளை வரையறுக்கக் கூடியதாகவும், பொருளாதார செயற்பாட்டினை வடிவமைத்து வழிநடத்தக் கூடியதாகவும் இருப்பதே தவிர தமது சொந்த மக்களின் உரிமைகளை ஒடுக்குவதன் மூலம் ஏற்படுகின்ற விளைவுகளை எதிர்கொள்வதில் இருந்து அரசினை பாதுகாப்பதல்ல. கோட்பாட்டு ரீதியாக இது நேரடியானதாகத் தோன்றினாலும் நடைமுறையில் அவ்வளவு வெளிப்படையானதாக இல்லை. உலகளாவிய சந்தைப் பொருளாதாரத்தின் தோற்றத்துடன், அரசுகள் ஏனைய அரசுகள் மீது அதிகளவில் தங்கியிருப்பதால் இது வரம்புகளை மங்கச் செய்கிறது மற்,றும் “உண்மையான” இறையாண்மை என்ற கருத்தை வெளியகப் பங்காளர்களின் தலையீடுகளுடன் அல்லது தலையீடில்லாமல் ஐ.நா போன்ற மேலாதிக்க நாடுகள் கேள்விக்குள்ளாக்குகின்றன. இதனால்தான் நிலைமாறுகால நீதி நடைமுறைப்படுத்தப்படும் போது “எமது இறையாண்மைக்கு அச்சுறுத்தல்” என்ற கருத்து மக்கள் மத்தியில் எழுகின்றது. ஐ.நா தீர்மானத்தின் உத்தரவுகள் வெளிநாடுகளில் இருந்து பிறப்பிக்கப்படுவதால் இது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாகத் தெரிகிறது. இதனால் இத்தகைய சிக்கல் நிலை ஏற்படுகின்ற போது அதற்கான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் இலங்கைக்கு இல்லை என்பது போல தோன்றுகிறது. இலங்கைக்கு இது

பொருத்தமான நடவடிக்கையல்ல என பொதுமக்களை நம்ப வைப்பதற்காக இத்தகைய சொற்கள், நேர்த்தியாக பயன்படுத்தப்படுள்ளது. உதாரணமாக, இலங்கை  தீர்மானத்திலிருந்து விலகுவதற்கான விருப்பத்தினை UNHRC இற்கு அறிவித்த போது, இலங்கை வெளிவிவகார அமைச்சர் தீர்மானத்திற்கு அணுசரனை வழங்கியதால் “இன்றுவரை இலங்கையின் இறையாண்மை மற்றும் கண்ணியத்திற்கு ஒரு களங்கம் ஏற்பட்டுள்ளது” எனக் குறிப்பிட்டார்.  இருப்பினும்ÀÀ இதற்கு முன்னர் விவரிக்கப்பட்டதன்படி, இலங்கை நிலைமாறகால நீதி பொறிமுறையை வழிநடத்தும் தீர்மானத்திற்கு ‘இணை ஆதரவினை” வழங்கியுள்ளது, அதாவது இலங்கை இத்தீர்மானத்தின் வடிவமைப்பு செயன்முறையின் ஒரு பகுதியாக இருந்துள்ளது என்பதையே இது கருதுகின்றது. எனவே, இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களில் இலங்கைக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்ற கருத்து இதன்மூலம் மறுக்கப்படுகின்றது.

இந்த வாதமும் முக்கியமானதாக கருதப்படுகின்றது ஏனெனில், நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் ஒரு அம்சமானது நாட்டின் சட்டம் மற்றும் சட்ட அமைப்புடன் ஒன்றிணைந்திருக்கும் அம்சமாகும். இது ‘சிறப்பு நீதிமன்றங்கள்’ அல்லது இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட சிறப்பு நீதித்துறை பொறிமுறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் (ஐ.நா தீர்மானம் 30/1, கட்டுரை 6) போன்ற குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான “சிறப்பு ஆலோசனையுடன்” இந்த பொறிமுறையை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இதன் முக்கித்துவம் என்னவெனில், நாட்டின் வழக்கமான நீத்துறை பொறிமுறையில் இருந்து வேறுபட்ட, நம்பகமான மற்றும் சுதந்திரமான நீதி செயன்முறையின் அவசியத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது. யுத்த மீறல்கள் தொடர்பான வழக்குகளை தொடர வேண்டும் என்றால், நாட்டின் வழக்கமான நீதித்துறைக்கு ஏற்கனவே இருந்ததை விடவும் அதிக சுமை ஏற்படும் என்பதால் நிலைமாறுகால நீதியின் போது இது பொதுவாக நடைமுறையில் உள்ளது. அதேபோல, இலங்கை இது போன்ற பாரியளவிலான மீறல்களுக்கு முகம் கொடுப்பது இதுவே முதல் முறையாகும் என்பதால் இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கான சட்ட அமைப்பு இலங்கையில் இல்லை. எனவே, யுத்தக் குற்றங்களுக்கு எதிரான வழக்குகளை தொடர அனுமதிக்கும் சட்டங்களை உருவாக்க சிறப்பு தொழில்நுட்ப உதவி தேவைப்படுகின்றது.

மேலும், இறையாண்மைக்கு

அச்சுறுத்தலாக அமைகிறது எனும் வாதத்திற்கு வழிவகுத்த மற்றொரு முக்கிய காரணி சர்வதேச நீதிபதிகளின் குறிப்பு ஆகும். இருப்பினும், குறிப்பிடப்படாத, பொதுமக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்படாத விடயம் என்னவெனில், இலங்கை வெளிநாட்டினரிடம் இருந்து தொழில்நுட்ப அறிவினையும் திறமைகளையும் பெற்றுக்கொண்ட போதிலும், முழு செயல்முறையையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்பதோடு அத்தகைய நீதிமன்றம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற நிபந்தனைகளையும் வடிவமைக்கும். இலங்கையில் தற்போது நிலவும் சூழலில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பார்களா இல்லையா என்பது சவாலான ஒரு விடயமாக இருக்கலாம். எப்படியிருந்த போதும், எந்தளவுக்கு இந்த செயல்முறையை நிராகரித்து அதற்கான உரிமையை ஏற்க தவறுகின்றோமோ அந்தளவிற்கு அதிகமாக நாம் நமது கட்டுப்பாட்டினை இழக்கிறோம். இது நிலையான சமாதானத்தின் நம்பிக்கையைத் தடுக்க மட்டுமே உதவுவதால், இத்தகைய கட்டுக்கதைகளில் இருந்து விடுபடுவது அவசியம் என்தோடு இச்செயன்முறைக்கான உரிமையை ஒவ்வொரு மட்டத்திலும் ஏற்றுக்கொள்வதும் அவசியமாகின்றது. ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட உலகளாவிய நிர்வாக அமைப்பில் இடம்பெறுகின்ற இலங்கைப் பற்றிய உரையாடலில் இலங்கை பங்கேற்க வேண்டியது அவசியம்.

## எமக்கு நிலைமாறுகால நீதி அவசியமில்லை - யுத்தம் நிறைவடைந்து விட்டதால் முன்னோக்கிச் செல்லலாம்

இது குறிப்பாக சிங்கள தீவிர தேசியவாத முகாம்களில் இருந்து உருவாகின்ற ஒரு மேலாதிக்க வாதமாகும். நாம் ஏன் கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும், நாங்கள் பயங்கரவாதத்தை தோற்கடித்து யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து விட்டோம் இப்போது எல்லாம் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் இருக்கிறது, பழைய காயங்களை தோண்டி எடுக்காமல் தொடர்ந்து முன்னோக்கி செல்லலாமா? துரதிஷ்டவசமாக அவ்வாறு நடைபெறுவதில்லை. மோதல்கள்

தொடர்ச்சியாக நடைபெறக்கூடியன, நாம் மூலக் காரணங்களை நிவர்த்தி செய்யாவிட்டால் நிச்சயம் மோதல்கள் நிகழ வாய்ப்புள்ளது. இது சில சமயங்களில் ஒரே மாதிரி அல்லாமல் வெவ்வேறு வடிவங்களில் மற்றும் வெள,வேறு காலங்களில் அதாவது 10, 20, 30 வருடங்களுக்குப் பிறகும் வெளிப்படலாம். இதனை நாம் எமது வரலாற்றில் நடந்த சம்பவங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் உதாரணமாக, 1971 இல் இடம்பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) தலைமையிலான ஆயுதக் கிளர்ச்சி 1987 இல் மீண்டும் தோன்றி 1989 வரை நீடித்தது. 2009 இல் விடுதலைப்புலிகளின் தோல்வியுடன் யுத்தம் நிறைவடைந்து ஒரு தாசாப்தம் கடந்து விட்ட போதிலும், கட்டமைப்பு வன்முறை இனங்களுக்கிடையிலான மதங்களுக்கிடையிலான மோதல்களின் பெருக்கத்துடன் வேறு வடிவங்களில் இடம்பெறுவதை நாம் காண்கிறோம். எனவே, யுத்தம் நிறைவடைந்திருந்தாலும் உண்மையில் மோதல் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா? என நாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியுள்ளது. இது முடிவிற்கு கொண்டு வருவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துவதோடு, மோதலின் மூலக்காரணங்களை சுட்டிக்காட்டுகின்ற குறைகளை அடையாளப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. நீதி வழங்கப்படாவிட்டால் இந்த காரணங்கள் மீண்டும் மீண்டும் முடுக்கி விடப்படும். எனவே மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் 12 ஆண்டுகளுக்கு முன்பு யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டாலும் நிலைமாறுகால நீதி ஏன் அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. நாம் முன்னோக்கி செல்வது கடந்த கால தவறுகளை மீண்டும் செய்வதற்கல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாம் ஒரு நாடு என்ற வகையில் எங்கிருந்தோம் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

ஐ.நா. தீர்மானம் 30/1 மூலம் முன்மொழியப்பட்ட இடைக்கால நீதிப் பொறிமுறையானது பல்வேறு அம்சங்களைக் கையாளக்கூடிய முக்கியமான வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளது, மேலும் இதனை செயற்படுத்துகின்ற போது யுத்த அநீதிகளுக்கு ஒரு முழுமையான தீர்வினை கொண்டு வரமுடியும். உதாரணமாக, உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் மூலம் யுத்தத்தின் போது நடந்த உண்மையை வெளிப்படுத்த முடியும். யுத்தம் பற்றிய ஒருவரின் கண்ணோட்டத்தைப் பொறுத்து உண்மை என்பது நபர்களுக்கிடையே வேறுபட்டிருக்கலாம், ஆனால் வேறுபட்ட உண்மைகளை ஒப்புக்கொள்வதன் ஊடாக போரின் போது நிகழ்ந்த பல்வேறு சம்பவங்கள், குணப்படுத்துதல்

மற்றும் முடிவுக்கு கொண்டுவருதல் போன்றவற்றினை அடைந்து கொள்ள முடியும். கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு சாட்சியின் வாக்குமூலங்களை மட்டும் பதிவு செய்ய முடியுமே தவிர குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர முடியாது. இது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும் ஏனெனில், பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல குற்றவாளிகளும் போர் குறித்த தமது கருத்தினை கூறி அதனை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளனர். தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஆழமான குணப்படுத்தலுக்கும் எதிரிகளுக்கிடையேயான உறவுகளை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கும் வழிவகுத்தமையானது நல்லிணக்கத்திற்கு ஒரு படி நெருக்கமாக செல்ல வழிகாட்டியது. உண்மையை கண்டறியும் கண்டறியும் ஆணைக்குழுவின் பதிவுகள் யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அடையாளம் காண வழிவகுக்கும். காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியவும் கண்டறிவுகளின் அடிப்படையில் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாட்டிற்கு இது வழிவகுக்கிறது. காணாமல் போனோர் அலுவலகம் 2017 இல் தனது பணியை தொடங்கியதோடு காணாமல் போனவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலம் அல்லது பிற சொத்துகள் அல்லது நிதிகளை கோருவதற்கு அவர்களது குடும்பங்கள் பயன்படுத்தக்கூடிய சட்டப்பூர்வமான ஆவணமாக குறித்த நபர் ‘இல்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றிழை’ வழங்க முடிந்தது. காணாமல் போனோர் அலுவலகம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் இன்னும் நிறைய இருக்கிறது, ஏனெனில் தாய்மார்கள் இன்னும் தமது பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமல் தங்கள் நாட்களை வேதனையுடன் செலவிடுகிறார்கள். இழப்பீட்டு அலுவலகம் போரின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி நிவாரணம் தரக்கூடிய மற்றொரு செயன்முறையாகும். இழப்பீடு வழங்குவதும் முன்னோக்கிச் செல்வதும் போதுமானதாக இருக்காது ஆனால் குறிப்பாக யுத்தத்தின் விளைவாக முழு வாழ்வாதாரத்தையும் இழந்தவர்களுக்கு ஏனைய பொறிமுறைகளுடன் இணைந்த வகையில் பெரும் நிவாரணம் வழங்கப்படலாம். இறுதியாக, மேலுள்ள பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள பொறிமுறையான சிறப்பு நீதிமன்றம்

மூலம் யுத்தத்தின் போது மிகக் கொடூரமான குற்றங்களைச் செய்தவர்களை தண்டிப்பதன் மூலம் தண்டனைக்குரிய நீதியை செயற்படுத்த முடியும். இது போன்ற குற்றங்களைச் செய்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஒரு செய்தியை அனுப்புவதில் இது முக்கிய பங்கினை வகிக்கிறது மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறு நிகழாமல் தடுக்கவும் முடியும். மிக முக்கியமாக, மக்கள் தமது துன்பத்தை மற்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என ஏங்குகிறார்கள். இதுதான் நிலைமாறு கால நீதி செயல்முறையாகும், இது முழுமையாக செயற்படுத்தப்பட்டால் மோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முடியும். “அவர்கள் யாரும் இறக்கவில்லை, யாரோ அவர்களை கொலை செய்துள்ளனர். அவர்கள் யாரும் தானாக காணாமல் போகவில்லை. அதனை யாரோ செய்துள்ளார்கள்” என மாந்தை கிழக்கில் காணாமல் போன ஒருவரின் தாய் கூறிய விடயம் விவரிக்கப்பட்டுள்ள CTF இன் அறிக்கையானது என்ன நடந்தது என்பதற்கான உண்மை மற்றும் நீதி வழங்கப்படலாம் மக்கள் தொடந்தும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் கடந்த காலத்தை ஆராய வேண்டும் என்பதையும் பரிந்துரைக்கிறது.

## முன்னோக்கி செல்ல வழியின்றி சேற்றில் சிக்கியுள்ளது போன்ற நிலை

இந்த கட்டுரை நிலைமாறுகால நீதியைப் பற்றிய சில தவறான கருத்துக்களை நீக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது, மேலும் நிலைமாறுகால நீதி தொடர்பான இலங்கையின் மனநிலையுடன் நாடு உண்மையில் முன்னோக்கிச் செல்லவும் நல்லிணக்கத்தை அடைந்து கொள்ளவும் இதுபோன்ற ஒரு பொறிமுறையின் தேவையை ஏற்றுக்கொள்ளும் நிலையை நோக்கி நம்மை அழைத்துச் செல்லவும் உதவுகிறது. நீதியன்றி அமைதி நிலவாது, நாம் இதை தீவிரமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளும் வரை மோதல்கள் பல்வேறு வடிவங்களில் இடம்பெறுவதை எம்மால் தொடர்ந்து அவதானிக்க முடியும். இது நாட்டின் பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்தை மட்டுமல்ல நாட்டின் பொருளாதார நிலைகளையும் கடுமையாக பாதிக்கும்.

இந்த கட்டுரை ஐ.நா தீர்மானத்தின் அடிப்படையில் நிலைமாறுகால நீதியை ஆராய்கிறது, ஏனெனில் இது

இலங்கைக்கென முன்மொழியப்பட்ட பொறிமுறையின் அடித்தளமாகும். இருப்பினும், இதற்கு குறைபாடுகள் இல்லை எனக் கூற முடியாது. ஏந்தவொரு பொறிமுறையும் மக்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை தீவிரமாக பரிசீலிக்க வேண்டும். CTF இன் கண்டறிவுகள் ஒரு தொடக்கப் புள்ளியாகும், ஏனெனில் இது நிலைமாறுகால நீதி குறித்து என்ன நினைக்கிறார்கள், என்ன விரும்புகிறார்கள் என்பதை கவனமாக வெளிப்படுத்துகிறது. ஏந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இதனை பின்பற்ற வேண்டும். இறுதியாக, ஐ.நா தீர்மானத்துடன் அல்லது இல்லாமல் நீதி வழங்கப்பட வேண்டும். நீதி வழங்கப்படாவிட்டால் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யாவிட்டால் நாங்கள் நம்மை துரத்துகின்ற கடந்த காலத்துடன், தொடர்ந்தும் “சிக்கி” கொண்டு இருப்போம்.

# **Sri Lanka Barometer:** Think Pieces Series

These short essays belong to the Sri Lanka Barometer series known as "Think Pieces". They capture issues and key concepts, which lurk behind the Barometer survey findings and the thematic studies. In combination with these other components of the Barometer, they deepen the understanding, and aim to strengthen the public discourse on social coherence and reconciliation.

They present issues that are diverse and feature subjects that touch on history, memory, justice, social psychology, and the grief of others. By presenting concepts in this manner, they become easy to read. They present stories, facts, theories; ideas that provoke the reader to think; to explore issues they may not be familiar with; or learn.

Because the pieces in this series are brief, they may be featured in public discussions; websites; even in feature articles in the print media.

THINK PIECES
3 – 2021

SRI LANKA BAROMETER
OUR VOICES . OUR CHOICES
අපේ හඬ . අපේ තීරණ
எங்கள் குரல்கள் . எங்கள் தேர்வுகள்